முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1510

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

17.11.2023, வெள்ளிக்கிழமை

1. தர்மனே ஞானத் தலைவனின்
தக்க என் அவதார பலமாய் வந்த
ஆறுமுக அரங்கனே ஐயனே
அரசனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
2. வரமென ஞான அறிவுரை ஆசி
வழங்குவேன் இனிதே அரங்கனுக்கு பலம் கூட
(சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் முதல் நாள், 17.11.2023, வெள்ளிக்கிழமை)
கூடவே ஆக்க சக்தியாக
குரு அருளாக ஆறுமுகன் யான் ஈடேற்றம்
3. நித்தம் நித்தம் அரங்கனுக்கு
எல்லா சக்தியுமாக வரம் அருளி வர
வருகவே அரங்கன் பலம்
வையகத்தில் இன்னும் கூட நேரும்
4. தர்மபலம் அரங்கனுக்கு இன்னும் பெருகப்பெருக
தரணியில் அன்பர்படை மிகுந்து இனிதே
இனிதே அரங்கன் நோக்கமாக
இந்த உலகம் ஞான உலகம் மாற்றம் பெறும்
5. கனிவேலன் யான் தயவுகொண்டு காத்துவர
கருணைபட அரங்கனை நோக்கிவரும் கரங்கள்
தர்மபலம் கொண்ட கரங்களாக
தரணியை ஞான ஆட்சிக்கு கொண்டு செல்லும்
6. மகா சக்திகளாக மாறி
இந்த பேருலகில் அற்புதம் நிகழும்
நிகழவே அரங்கனை நோக்கி நிலவுலகம் ஆற்றல்பட
மாற்றம் கருதி திரும்பிப்பார்க்கும் காலங்கள் கனிந்துவர

7. வருகவே உலகோர் அரங்கன் குடில் தொடர்புள்ள
வல்லமையான தகவலையும் நன்நூல்களையும்
தொடர்ந்து வாசித்தால் போதும்
அங்கெல்லாம் அரங்கன் சக்தியாக
8. ஆறுமுகன் யான் இறங்கி
அற்புதம் நடத்துவேன் ஆக்கம் பல தந்து
இந்த அகிலத்தையே மாற்றுவேன்
ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—